LIBRARY
24 FEB 2017
EASTERN UNIVERSITY, SRI LANKA

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட வெளிவாரிக் கல்விமாணித் தேர்வு–2009/2010

## மீள்பரீட்சை - வெளிவாரி (2017 – March / April )

## EDU 302 பாடசாலை முகாமைத்துவம் (School Management)

நேரம்: 03மணித்தியாலங்கள்

நீர் விரும்பிய ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

---

1. அ."கல்வி முகாமைத்துவம்" என்ற எண்ணக்கருவை விளக்கி, பாடசாலையொன்று கொண்டிருக்க வேண்டிய முகாமைத்துவப் பண்புகள் ஐந்தினை (05) முன்வைத்து விளக்குக. (10 புள்ளிகள்)

   ஆ.பயன்தரும் பாடசாலையொன்றின் பண்புகள் ஐந்தினை (05) எடுத்துக் கூறி அவை தற்போதைய பாடசாலையில் எவ்வாறு பயனுடையதாக அமைகின்றது என்பதனை விளக்குக. (10 புள்ளிகள்)

2. அ."அறிவுறுத்தும் தலைமைத்துவப் பண்பினை அதிபர் கொண்டிருப்பதன் மூலமே பாடசாலை தமது இலக்கினை நோக்கிச் செல்ல முடியும்".
   இவ்வாறான ஐந்து (05) பண்புகளை எடுத்துக்கூறி விளக்குக. (10 புள்ளிகள்)

   ஆ.முகாமைத்துவத்தில் தீர்மானம் எடுத்தல் முக்கியமான செயற்பாடாகும். இதன் முக்கிய படிமுறைகளைச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

3. அ.சிறப்பான முகாமைத்துவச் செயற்பாடுகளுக்குத் தொடர்பாடலின் முக்கியத்துவத்தினைச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

   ஆ."முறைசாராக் குழுக்களின் செயற்பாடுகள் பாடசாலையின் இலக்கினை அடைவதில் தாக்கம் செலுத்துகின்றன."
   இக்கருத்தினைச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

4. அ."மாற்றம் ஒரு நிறுவனத்திற்கு அவசியமானது." இக்கருத்து எந்தவகையில் சாத்தியமாகின்றது என்பதைச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

   ஆ.மாற்றம் ஒன்றினைப் பாடசாலையில் ஏற்படுத்தும்போது அதிபர் கடைப்பிடிக்க வேண்டிய ஐந்து (05) உத்திகளை எடுத்துக் கூறிச் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

5. அ.'வினைத்திறன்', 'விளைதிறன்' எனும் பதங்களைப் பொருத்தமான உதாரணங்களுடன் சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

   ஆ. வினைத்திறனான பாடசாலையின் பண்புகள் பத்தினைப் (10) பட்டியலிடுக. (10 புள்ளிகள்)

6.அ.நேரவளத்தைச் சிறப்பாகப் பேணுவதற்கு அதிபர் கொண்டிருக்க வேண்டிய திறன்களையும் மேற்கொள்ள வேண்டிய பணிகளையும் விளக்குக. (10 புள்ளிகள்)

ஆ.பௌதீகவளத்தைப் பேணுவதில் அதிபர் கடைப்பிடிக்க வேண்டிய செயற்பாடுகள் ஐந்தினை(05) முன்வைத்து விளக்குக. (10 புள்ளிகள்)

7.அ."மேற்பார்வை, கண்காணித்தல் ஆகிய பாடசாலையின் முகாமைத்துவச் செயற்பாடுகள் அதன் இலக்கினை அடைவதில் முக்கியத்துவம் பெறுகின்றன." இக்கூற்றின் முக்கியத்துவம் ஐந்தினைச் சுருக்கமாகக் குறிப்பிட்டு விளக்குக. (10 புள்ளிகள்

ஆ.பாடசாலையின் இலக்கினை அடைவதில் கலைத்திட்ட முகாமைத்துவச் செயற்பாடுக எவ்வாறு இணைபுபடுத்தப்படவேண்டும் என்பதை விளக்குக.

(10 புள்ளிகள்

8. பின்வருவனபற்றி விளக்குக.

அ. பாடசாலைமட்ட ஆசிரியர் அபிவிருத்தித் திட்டம்

ஆ. ஆயிரம் (1000) பாடசாலைத் திட்டம்

இ. பிரதியதிபரின் கலைத்திட்ட அமுலாக்கச் செயற்பாடுகள்

ஈ. தேசிய இலக்கினை அடைவதில் பாடசாலையினது இலக்கின் பங்களிப்பு

(4 x 5 = 20 புள்ளிகள்)